**இனிமையான குழந்தைகளே! பாபாவின் வலது கர்மாகி, சேவையில் ஆர்வம் வைத்து ஸ்ரீமத் மீது முழுமையிலும் முழுமையான கவனம் வையுங்கள். செய்தித்தாள்களில் சேவைக்கான விசயம் ஏதேனும் வந்தால், அதைப் படித்து சேவையில் ஈடுபடுங்கள்.**

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் பாபாவின் பெயரை எப்போது புகழ்பெறச் செய்ய முடியும்?

பதில்: உங்களின் நடத்தை எப்போது மிக ராயலாகவும், கம்பீரமாகவும் ஆகுமோ, அப்போது தான் பாபாவின் பெயரை புகழ்பெறச் செய்ய முடியும். சக்திகளாகிய உங்களின் நடத்தை பெண்மயில் போல இருக்க வேண்டும். உங்கள் வாயிலிருந்து ரத்தினங்கள் தான் வெளிவர வேண்டும், கல் போன்ற வார்த்தைகள் வெளிவரக் கூடாது. கல் போன்ற வார்த்தைகளைப் பேசுபவர்கள் பெயருக்கு களங்கம் விளைவிக்கிறார்கள். பிறகு அவர்களின் பதவியும் குறைந்து விடுகிறது. பாபாவினுடையவரான பிறகு எந்த பாவ கர்மங்களும் செய்யக் கூடாது. இந்த விசயத்தில் முழுமையிலும் முழுமையான கவனம் வைக்க வேண்டும்.

பாடல்: ஆகாய சிம்மாசனத்தை விட்டு இறங்கி வாருங்கள்.......

ஓம் சாந்தி! குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். ஹே! பரமபிதா பரமாத்மாவே நிராகார (சரீரமற்ற) ரூபத்தை மாற்றி சாகாரத்தில் (சரீரத்தில்) வாருங்கள் என்று நினைவு செய்கிறார்கள். அவர் எந்த ரூபத்திற்கு மாறுகிறார்! ஆமை-மீன் (கச்ச-மச்ச அவதாரம்) ரூபத்தில் வாருங்கள் என்று சொல்வதில்லை. இது பாவ ஆத்மாக்களின் உலகமாகும். தூய்மையாக்குவதற்காக அழைக்கிறார்கள்.ஒருவேளை அவர் சர்வ வியாபியாக இருந்தால், பிறகு யாரைக் கூப்பிடு கிறார்கள்? இப்போது இந்தப்பாடல் ரேடியோவிலும் இசைக்கிறது. இருப்பினும் யாரும் புரிந்து கொள்வதில்லை. இப்போது (பெண்) குழந்தைகளாகிய நீங்களோ செய்தித்தாள் போன்றவற்றைப் படிப்பதில்லை. எழுதப்படிக்கத் தெரிந்திருந்தாலும், செய்தித்தாள் படிப்பதற்கான ஆர்வம் வைப்ப தில்லை. மற்றப்படி கோபர்களில் (ஆண் குழந்தைகளில்) ஒரு சிலர் செய்தித்தாள்கள் மூலம் எவ்விதமாக சேவைக்கு வழிவகுப்பது என்றெல்லாம் சேவையில் ஆர்வம் காட்டுகிறார்கள். பிராமண குல பூஷணர்களோ நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிலும் கூட கோடியில் ஒரு சிலர் தான் செய்தித்தாளைப் பார்த்ததும், உடனடியாக சேவையில் ஈடுபடு கிறார்கள். பாபா மாதர்களை வலது கரமாக ஆக்கியுள்ளார். கோபர்களால் (ஆண் குழந்தைகள்) எளிதில் நிலைத்து நிற்க முடிவதில்லை. ஏதேனும் ஒரு சிலர் தான் யதார்த்தமாக ஸ்ரீமத் மீது கவனம் கொடுக் கிறார்கள். பிரஷ்டாச்சாரிகள் அழைக்கிறார்கள்--ஏ, பகவானே! வாருங்கள், வந்து எங்களை சிரேஷ்டாச்சாரி ஆக்குங்கள். இது பிரஷ்டாச்சாரம் மற்றும் சிரேஷ்டாச்சாரத்திற்கான விசயமாகும். அனைவரும் கண்டிப்பாக பிரஷ்டாச்சாரிகளாகத் தான் இருக்கிறார்கள். எப்படி ராஜா ராணியோ, அப்படியே பிரஜைகள் என்று சொல்லப்படுகிறது. ராஜா ராணி எப்படியோ, அதாவது அரசாங்கம் எப்படியோ அப்படியே பிரஜைகள் அதாவது குடிமக்கள் ஆவர். பாரதம் சதா சிரேஷ்டாச்சாரியாக இருந்தது, அதாவது சொர்க்கமாக இருந்தது என்று

குழந்தைகளுக்குப் புரியவைக்கப்பட்டுள்ளது. சொர்க்கத்திலும் பிரஷ்டாச்சாரிகள் இருந்திருந்தால், பிறகு அதை சொர்க்கம் என்று எப்படிச் சொல்ல முடியும்? சொர்க்கத்தை கண்டிப்பாக பாபா தான் ஸ்தாபனை செய்திருக்க முடியும். அவரைத் தான் நினைவு செய்கிறார்கள். பிரஷ்டாச்சாரிகள் தான் கூப்பிடு கிறார்கள். சிரேஷ்டாச்சாரிகள் ஒருபோதும் கூப்பிடுவதில்லை. பாரதம் மிகவும் சிரேஷ்டாச் சாரியாக இருந்தது, சொர்க்கமாக இருந்தது. ஆனால் இப்போதோ நரகமாக உள்ளது. ஆக கண்டிப்பாக நரகத்தில் பிரஷ்டாச்சாரிகள் தான் இருப்பார்கள். சிரேஷ்டாச்சாரிகள் இருந்ததை நிரூபித்துக் காட்டுங்கள். சத்யுகத்தில் பிரஜைகளைப் போலவே இந்த லக்ஷ்மி நாராயணரும் சிரேஷ்டாச்சாரிகளாக இருந்தார்கள் அல்லவா! இதற்கான படங்களை நீங்கள் காட்ட முடியும். அதன் பெயரே சொர்க்கம் ஆகும். துவாபர யுகத்தில் இப்படிப்பட்ட சிரேஷ்டாச்சாரி ராஜா ராணிகளின் கோயில்களைக் கட்டி பூஜை செய்கின்றனர். ஆக கண்டிப்பாக அவர்களே பிரஷ்டாச்சாரிகளாகத் தான் இருக்கிறார்கள். நாங்கள் பிரஷ்டாச்சாரிகள், ஆசைக்கு வசமானவர் கள், கோபம் நிறைந்தவர்கள், பாவிகள் என்று தன்னைத் தானே சொல்லிக் கொள்கிறார்கள். நீங்களோ சர்வ குணங்களும் நிறைந்தவர்கள் என்று சொல்கிறார்கள். பாரதத்தில் பிரஷ்டாச் சாரிகள் சிரேஷ்டாச்சாரிகளை மகிமை செய்கிறார்கள். பிரஷ்டாச்சாரி ராஜாக்களிடம் சிரேஷ்டாச்சாரி தேவதைகளின் கோயில்கள் உள்ளன. அவர்கள் மகிமை பாடிக் கொண்டே இருக்கிறார்கள். மந்திரங்களை ஜெபித்துக் கொண்டே, பூஜை செய்து கொண்டே இருக்கிறார்கள். பாபா புரிய வைத்திருக்கிறார்--தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக எந்த ஆத்மாக்கள் மேலிருந்து வருகிறார்களோ, அவர்கள் கண்டிப்பாக சதோ பிரதானமாக, சிரேஷ்டாச்சாரிகளாக இருப்பார்கள். மாயையின் ராஜ்ஜியமாக இருந்தாலும் கூட முதன் முதலில் வரக் கூடியவர்கள் கண்டிப்பாக சதோபிரதானமாக இருப்பார்கள். அப்போது தான் அவர்களின் மகிமையும் ஏற்படுகிறது. பிறகு சதோ, ரஜோ, தமோவில் வருகின்றனர். தேவதைகள் சிரேஷ்டாச்சாரிகளாக இருந்தனர். ஒவ்வொருவரும் சதோ, ரஜோ, தமோவில் வந்தே தீர வேண்டும், பிரஷ்டாச்சாரி ஆகியே தீர வேண்டும். நிறைய இயக்கங்கள் பிரஷ்டாச்சாரத்தை முடிப்பதற்காக முயற்சி செய்வதாக செய்தித்தாள்களில் வருகிறது. சிரேஷ்டாச்சாரி தேவதைகளின் கோயில்களைக் கட்டி பூஜை செய்து கொண்டே வருகிறார்கள். நீங்கள் தான் பூஜைக்குரிய சிரேஷ்டாச் சாரிகளாக இருந்தீர்கள், பிறகு நீங்கள் தான் பூஜாரி பிரஷ்டாச்சாரி ஆகின்றீர்கள், பிறகு பூஜைக்குரிய தேவி தேவதைகளுக்கு அமர்ந்து பூஜை செய்கின்றீர்கள். எப்படி ராஜா ராணியோ, அப்படியே பிரஜைகளும் சத்யுகத்தில் சிரேஷ்டாச்சாரிகளாக இருந்தனர், விகாரமற்ற உலகமாக இருந்தது என்று இப்போது நீங்கள் எழுத முடியும். பிறகு கலைகள் குறைந்து கொண்டே போகின்றன. பாரதம் கீழே வந்து தான் தீர வேண்டும். இந்த விளையாட்டே பாரதத்தில் தான் நடக்கிறது. அரை கல்பம் பாரதம் சிரேஷ்டாச் சாரியாக இருந்தது. எப்போதும் ஒரே விதமாக இருப்பதில்லை. 16 கலையிலிருந்து 14 கலையாக ஆகியே தீர வேண்டும். கொஞ்சம் கொஞ்ச மாக கலைகள் குறைந்து கொண்டே வருகின்றன. தமோபிரதானம் ஆகி விடு கின்றனர். பாபா சொல்கிறார், எப்போதெல்லாம் உலகம் மிகவும் பிரஷ்டச்சாரம் ஆகி விடுகிறதோ, அப்போது நான் வருகின்றேன். தூய்மையற்றவர்களை பிரஷ்டாச்சாரி என்றும், தூய்மையானவர்களை சிரேஷ்டாச்சாரி என்றும் சொல்கிறார்கள். இது

முற்றிலும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும்.

ஸ்ரீமத் பகவத் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீமத் என்ன செய்கிறது? அது ராஜாக்களுக்கெல்லாம் சிறந்த ராஜாவாக ஆக்குகிறது. பாபா சொல்கிறார், இந்த மாயை மீது வெற்றி அடைந்தால், நீங்கள் இளவரசன்-இளவரசி ஆவீர்கள். ஒப்பிட்டுப் பாருங்கள்--கிறிஸ்துவுக்கு 3000 வருடங் களுக்கு முன்பு பாரதம் 16 கலைகள் நிறைந்த சம்பூர்ண சிரேஷ்டாச்சாரியாக இருந்தது. பாரதம் பொற்குருவியாக இருந்தது. ராஜா ராணியைப் போலவே பிரஜைகளும் சொர்க்கத்தில் சதா சுகமாக இருந்தனர். பிறகு எப்போது இராவண இராஜ்யம் ஆரம்பமானதோ, அப்போதே பிரஷ்டாச் சாரிகளாகி விடுகின்றனர். இங்கே எங்கள் (அரசாங்க) அதிகாரிகளிடம் பிரஷ்டாச்சாரம் இருக்கிறது என்று அவர்களே சொல்கின்றனர். பிரஜைகள் பிரஷ்டமானவர்கள் என்று சொல்வதற்கு இங்கே ராஜா ராணி யாரும் கிடையாது. இங்கே இருப்பதோ பிரஜைகளின் மீதான பிரஜைகளின் ராஜ்ஜியம் ஆகும். அனைவரும் பிரஷ்டாச்சாரிகளாக இருக்கின்றனர். முதலில் அரசாங்கம் சிரேஷ்டாச்சாரியாக ஆக வேண்டும். அவர்களை யார் உருவாக்குவது? இப்போது ஏழைக் குழந்தைகளாகிய நீங்கள் தான் நம்பர் ஒன் சிரேஷ்டாச்சாரிகளாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். பாபா சொல்கிறார், நான் வந்து அனைவரையும் சிரேஷ்டாச்சாரியாக ஆக்குகின்றேன். நாடகத்தின் படி இந்த முழு விளையாட்டும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே கீதையின் சித்திரங்கள் வெளிப்படும். இப்போது வங்காளத்தில் காளியின் கோயில் உள்ளது. காளித் தாயே! தாயே! என்று சொல்லி உயிரை விடுகின்றனர். இந்த காளி மற்றும் சண்டிகா தேவி ஆகியோர் எங்கிருந்து வந்தனர்? பெயர்கள் எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்களா? யார் பாபாவை விட்டுப் போய் விடுகிறார்களோ, அவர்கள் பிரஜைகளில் சண்டாளன் ஆகிறார்கள். ஆனால் யார் இங்கே இருந்து கொண்டே பாவ கர்மங்கள் செய்கிறார்களோ, அவர்கள் ராயல் வம்சத்தின் சண்டாளன் ஆகிறார்கள். இருப்பினும் அவர்களுக்கு நல்ல விருந்து கிடைத்து விடுகிறது. ஏனெனில் இங்கே தத்தெடுக்கப்படுகிறார்கள் அல்லவா! இதனால் சண்டிகா தேவியின் பூஜை நடக் கிறது. ஞானம் மிக ஆழமானது. ஆனால் ஒரு சிலர் தான் தாரணை செய்வார்கள். சில வக்கீல்கள் லட்சங்களை சம்பாதிக்கிறார்கள் மற்றும் சிலருக்கு வக்கீல் கோட் கூட கிழிந்திருக்கிறது. அது போலத் தான் இதுவும் உள்ளது. இது எல்லைக்கப்பாற்பட்ட படிப்பு ஆகும். பாபா விரிவாகப் புரிய வைத்ததைச் சுருக்கி 5 நிமிடங்களுக்கான சொற்பொழிவாக்கி செய்தித் தாள்களில் போட வேண்டும். ஹிந்து தர்மத்தை ஸ்தாபனை செய்தது யார் என்பதை யும் கேட்க வேண்டும். இதற்குப் பதில் சொல்ல முடியாது. மனிதர்களுக்கு ஒன்றும் தெரிவ தில்லை. சக்திகளாகிய உங்களின் நடத்தை பெண்மயில் நடப்பதைப் போல கம்பீரமாக இருக்க வேண்டும். வாயிலிருந்து ரத்தினங்கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். கல் போன்ற வார்த்தைகள் வரக் கூடாது. அவர்கள் கல்லால் அடித்துக் கொள்வர்கள். நீங்கள் ஒருபோதும் கல்லால் அடித்துக் கொள்ளாதீர்கள், பெயருக்கு களங்கம் விளைவிக்காதீர்கள். நல்லது

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

இரவு வகுப்பு: இங்கே நல்ல மற்றும் கெட்ட மனிதர்கள் இருக்கிறார்கள்.

சத்யுகத்தில் இப்படிப் பட்ட வார்த்தைகள் சொல்லப்படுவதிலை. கெட்ட அதாவது பாவ ஆத்மா என்ற வார்த்தையே கிடையாது. அது விகாரமற்ற உலகமாகும். நாம் உலகத்திற்கு எஜமானர்களாக இருந்தோம் என்று குழந்தைகளுக்குத் தெரியும். தேவி தேவதைகளின் இராஜ்ய ஸ்தானமாக இருந்த பாரதம் இப்போது பழையதாக இருக்கிறது. மனிதர்களுக்கு இது சங்கமயுகம் என்பது தெரிவ தில்லை. இப்போது இங்கிருந்து நங்கூரம் எடுக்கப்பட்டு விட்டது. நாம் இந்த உலகத்தைக் கடந்து செல்கிறோம். பாபா படகோட்டி அல்லவா! படகுப் பிரயாணிகளை அக்கரைக்கு அழைத்துச் செல்கிறார். மிகவும் சோர்வடைந்து விட்டோம் என்று குழந்தைகளின் புத்தியில் இருக்கிறது. ஆனால் நாம் மிகவும் சோர்வடைந்து விட்டோம் என்று பக்தர்களுக்குத் தெரிவ தில்லை. அவர்கள் மிகவும் தூர தூரமாகச் செல்கிறார்கள். குழந்தைகளாகிய நீங்கள் நினைவு மட்டும் செய்ய வேண்டும். நாம் நினைவு செய்து, செய்து சோர்ந்து விடுகிறோம் என்பது கிடையாது. ஆனால் மாயை விக்னங்களை (தடைகளை) ஏற்படுத்துகிறது. ஆத்மா தான் பரமாத்மாவின் பிரியதர்ஷினியாக ஆகிறது. இதை யாரும் அறியவில்லை. பரமாத்மா பிரியதர்ஷனாக இருக்கிறார். ஆக குழந்தைகளிலும் கூட சிலர் மிகுந்த பிரியதர்ஷினியாக இருக்கிறார்கள், பிரியதர்ஷனை நினைவு செய்கிறார்கள். நாம் நிரந்தரமாக நினைவு செய்து கொண்டே இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். சிமரனை (நினைத்தல்) என்பது கூட பக்தி மார்க்கத்தின் வார்த்தை ஆகும். நாம் பாபாவை நினைவு செய்கிறோம். நினைவு என்பது இல்லற மார்க்கத்தின் வார்த்தை ஆகும். இந்த வார்த்தை மிக இனிமையாகவும் இருக்கிறது. நாங்கள் மறந்து விடுகிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் பாபாவை மறந்து விடுகிறோம் என்பவர்கள் குழந்தைகள் என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்ன? நினைவு செய்வது மிகவும் நல்லது. தனக்குள் பேசிக் கொள்ள வேண்டும். நீங்கள் தாய் தந்தையின் முன்பு அமர்ந்துள்ளீர்கள். மகிழ்ச்சியும் இருக்க வேண்டும். நீ தான் தாயும் தந்தையும் என்று இதைத் தான் சொல்கிறார்கள் சொல்- வந்தீர்கள். முன் போலவே நாம் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறோம். நினைவில் தான் முயற்சி உள்ளது. உங்களுக்கு இதில் மிகவும் வருமானம் உள்ளது, மிகப் பெரிய பிராப்தியும் உள்ளது. அமைதியாய் இருந்து நினைவு செய்ய வேண்டும். நல்லது.

2. பிராமண குழந்தைகளாகிய உங்களைத் தவிர சங்கமயுகம் எப்போது ஏற்படுகிறது என்று யாருக்கும் தெரியாது. கல்பத்தின் இந்த சங்கமயுகத்துக்கு மகிமை அதிகம். பாபா வந்து இராஜ யோகம் கற்றுக் கொடுக்கிறார். இப்போது இந்த புருஷோத்தம சங்கமயுகத்தை பிராமண குழந்தைகளாகிய உங்களைத் தவிர யாரும் அறியவில்லை. மனிதர்கள் தெரிந்து கொள்ளும் படியாக இதை எப்படி விளம்பரப்படுத்துவது! சங்கமயுகத்தில் பகவானே வந்து இராஜயோகம் கற்பிக்கிறார். நாம் இராஜயோகம் கற்றுக்கொண்டிருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும். இப்போது மனிதர்கள் தெரிந்து கொள்ளும்படியாக எந்த ஒரு யுக்தியை உருவாக்கலாம்! இருப்பினும் மெதுவாக இது நடக்கும். இப்போது நேரம் வந்து விட்டது. பலகாலம் கழிந்து விட்டது, இன்னும் கொஞ்சம் இருக்கிறது...........! நாம் சொல்வோமானால் மனிதர்கள் வேகமாக முயற்சி செய்வார்கள். இல்லையானால் ஞானம் ஒரு வினாடியில் கிடைத்து விடுகிறது. அதன் மூலம் நீங்கள் அதே நேரம் ஒரு வினாடியில் ஜீவன் முக்தி அடைந்து விடுவீர்கள். ஆனால் உங்கள் தலை மீது அரைகல்பத்திற்கான பாவம் இருக்கிறது. அது வினாடியில் அழிந்து விடுமா என்ன! இதற்கு நேரம் பிடிக்கிறது.

இப்போது இன்னும் நேரம் இருக்கிறது. இப்போது நாம் ஏன் பிரம்மாகுமாரிகளிடம் செல்ல வேண்டும் என மனிதர்கள் நினைக்கின்றனர். அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால், புத்தகங்களிலிருந்தும் கூட தலை கீழாகப் புரிந்து கொள்கிறார்கள். இது புருஷோத்தமர் ஆக வேண்டிய நேரம் என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். வைரத்தைப் போன்றது என்று பாடல் கூட இருக்கிறதல்லவா! பிறகு மதிப்பு குறைந்து தங்க யுகம், வெள்ளி யுகம் (கோல்டன் ஏஜ், சில்வர் ஏஜ்) ஆகி விடுகிறது. இந்த சங்கம யுகம் வைர யுகம் (டையமண்ட் ஏஜ்) ஆகும். சத்யுகம் தங்க யுகம் ஆகும். சொர்க்கத்தை விட இந்த சங்கம யுகம் சிறந்தது, வைரத்தைப் போன்ற பிறவி என்று உங்களுக்குத் தெரியும். அமரலோகத்தின் பாடல் கூட இருக்கிறதல்லவா! பிறகு குறைந்து கொண்டே போகிறது. ஆக இதைக் கூட எழுத முடியும்--புருஷோத்தம சங்கம யுகம் வைரம், சத்யுகம் தங்கம், திரேதா யுகம் வெள்ளி...! இதைக் கூட நீங்கள் புரிய வைக்க முடியும்--சங்கம யுகத்தில் தான் நாம் மனிதரிலிருந்து தேவதை ஆகிறோம். எட்டு ரத்தினங்களால் ஆன மோதிரம் உருவாக்கும் போது, வைரம் நடுவில் வைக்கப்படுகிறது. சங்கமத்தின் மதிப்பு காட்டப்படுகிறது. சங்கம யுகமே வைரத்தைப் போன்ற தாகும். வைரத்தினுடைய மதிப்பு சங்கம யுகத்திற்கு உள்ளது. யோகம் முதலியன கற்றுக் கொடுக்கும் போது, ஆன்மீக யோகம் என்று சொல்கிறர்கள். ஆனால் ஆன்மீகமானவர் ஒரு தந்தையே ஆவார். ஆன்மீகத் தந்தை மற்றும் ஆன்மீக ஞானம் சங்கமயுகத்தில் தான் கிடைக் கிறது. தேக-அகங்காரமுள்ள மனிதர்கள் எப்படி அவ்வளவு விரைவாக ஏற்றுக் கொள்வார்கள். ஏழைகள் போன்றோருக்கு புரிய வைக்கப்படுகிறது. ஆக சங்கமயுகம் வைரம் போன்றது, அதனுடைய ஆயுள் இவ்வளவு, என்பதையும் எழுத வேண்டும். சத்யுகம் பொற்காலம், அதனுடைய ஆயுள் இவ்வளவு. சாஸ்திரங்களில் கூட ஸ்வஸ்திக் காட்டுகிறார்கள். ஆக குழந்தைகளாகிய உங்களுக்கும் கூட இது நினைவு இருக்கிறது என்றால் எவ்வளவு குஷி இருக்க வேண்டும். மாணவர்களுக்கு குஷி ஏற்படுகிறது அல்லவா? மாணவ வாழ்க்கை தான் மிகச் சிறந்த வாழ்க்கை யாகும். இது வருமானத்திற்கான ஆதாரமாகும். இது மனிதனிலிருந்து தேவதையாக ஆவதற்கான பாடசாலை யாகும். தேவதைகள் உலகத்திற்கு எஜமானர்களாக இருந்தார்கள். இதுவும் உங்களுக்குத் தெரியும். எனவே அளவற்ற குஷி இருக்க வேண்டும். ஆகையினால் தான் அதீந்திரிய சுகத்தை கோபி வல்லபரின் கோப-கோபியரிடம் கேளுங்கள் என்று பாடப்பட்டுள்ளது. டீச்சர் கடைசி வரை படிப்பிக்கின்றார் என்றால், அவரை கடைசி வரை நினைவு செய்ய வேண்டும். பகவான் படிப்பிக் கின்றார். மேலும் பிறகு பகவான் கூடவே அழைத்துக் கொண்டும் செல்வார். விடுவிப்பவரே, வழிகாட்டியே! துக்கத்திலிருந்து விடுவியுங் கள் என்று அழைக்கிறார்கள். சத்யுகத்தில் துக்கம் ஏற்படுவதே இல்லை. உலகத்தில் அமைதி ஏற்பட வேண்டும், என்று கூறுகிறார்கள். முன்னால் அமைதி எப்போது இருந்தது, என்று கேளுங்கள். அது எந்த யுகமாக இருந்தது? யாருக்கும் தெரியாது. இராம இராஜ்யம் சத்யுகம், இராவண இராஜ்ஜியம் கலியுகமாகும். இதைத் தெரிந்திருக்கிறீர்கள் அல்லவா? குழந்தைகள் அனுபவத்தைச் சொல்ல வேண்டும். மனதின் விஷயத்தை என்னவென்று சொல்வது? எல்லையற்ற தந்தை எல்லையற்ற இராஜ்ஜியத்தைக் கொடுக்கக் கூடியவர் கிடைத்து விட்டார், வேறு என்ன அனுபவம் சொல்வேன். வேறு எந்த விஷயமுமே இல்லை. இதைப் போன்ற குஷி வேறு எதுவும் இருப்பதில்லை. உண்மையில் ஒருபோதும் யாரிடமும் கோபித்துக் கொண்டு வீட்டிலேயே இருந்து விடக்

கூடாது. இது தங்களுடைய அதிர்ஷ்டத்தைக் கோபித்துக் கொள்வது போலாகும். படிப்பின் மீது கோபித்துக் கொண்டால், என்ன கற்றுக் கொள்வீர்கள்? பாபா பிரம்மாவின் மூலம் கல்வி கற்றுக் கொடுக்கத் தான் வேண்டும். ஆகவே ஒருவர் மற்றவரிடம் ஒருபோதும் கோபித்துக் கொள்ளக் கூடாது. இது மாயையாகும். யக்ஞத்தில் அசுரர்களின் தடைகள் ஏற்படுகிறது அல்லவா? நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் இரவு வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) ஸ்ரீமத்படி நடந்து உயர்ந்தவர்களாக ஆகி உயர்ந்தவர்களாக மற்றவர்களை மாற்றும் சேவை செய்ய வேண்டும். பெயர் கெடும் அளவிற்கான நடத்தைகள் இருக்கக் கூடாது. வாயிலிருந்து எப்போதும் ஞான ரத்தினங்கள் தான் வர வேண்டுமேயன்றி, கற்கள் அல்ல.

(2) எல்லையற்ற ஆழமான படிப்பை விரிவாகக் கேட்டு அதை சாரமாக நிறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஸ்ரீமத்தின் மீது முழு கவனம் வைக்க வேண்டும்.

வரதானம் : தனது செயல் மற்றும் மனநிலை மூலம் பிரம்மா பாபாவை தெளிவாக காட்டக்கூடிய மாஸ்டர் பிரம்மா ஆகுக.

முதலில் நீங்கள் என்பது பிரம்மா பாபாவின் உண்மையான சம்ஸ்காரமாக இருந்தது. எப்படிப்பட்ட இடமாக இருந்தாலும் முதலில் குழந்தைகள், ஒவ்வொரு விஷயத்திலும் குழந்தை களை தனக்கு முன்னால் வைத்தார். ஆனால் சொல்வது மட்டுமல்ல, நல்ல சிந்தனை யுடைய உணர்வோடு. அவர்கள் செய்தாலும் கூட பாபாவின் சேவை தான், நான் செய்தாலும் பாபாவின் சேவைதான். நான் மட்டும் முன்னேற வேண்டும் என்பது போன்று அல்ல. மற்றவர்களையும் முன்னேற்றி முன்னேறுங்கள். இந்த பாவணை ஒவ்வொருவரிடமும் வரும் பொழுது தான் சொல்ல முடியும் மாஸ்டர் பிரம்மா. நாங்கள் பிரம்மா பாபாவை பார்க்கவே இல்லை என்று யாருமே சொல்லவே முடியாது. உங்களுடைய செயல், உங்களுடைய மனநிலை பிரம்மா பாபாவை தெளிவாக காட்டும்.

சுலோகன்: ஒருமுகப்படுத்தும் தன்மையின் உறுதியான எண்ணங்களினால் கடலின் அடியில் சென்று விட்டீர்கள் என்றால் அனுபவத்தின் வைரம், முத்து கிடைத்து கொண்டேயிருக்கும்.